ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2142/69 - 2019 සැප්තැම්බර් මස 26 වැනි බ්‍රහස්පතින්දා - 2019.09.26

*2142/69 ஆம் இலக்கம் – 2019 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 26 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

***2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டம் 3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழான கட்டளை***

திருத்தப்பட்டவாறான 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர் மலிக் சமரவிக்ரம ஆகிய நான், முதலீட்டு ஊக்குவிப்பு என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சராக விருப்பதனால், 2016, யூலை 05 ஆந் திகதிய 1974/15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் 3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட அடுத்துப்பின்னரான கட்டளையினால் திருத்தப்பட்டவாறாக, 2011, யூலை 11 ஆந் திகதிய 1714/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் 3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட கட்டளைக்கு மேலதிகமாக இக்கட்டளைமூலம் பின்வருமாறு வெளிப்படுத்துகின்றேன்.

2016, யூலை 05 ஆந்திகதிய 1974/15 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியின் 3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட அடுத்துப்பின்னரான கட்டளையினால் திருத்தப்பட்டவாறாக, 2011, யூலை 11 ஆந் திகதிய 1714/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையின் (4) ஆம் வாசகம், கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு வழங்கப்பட்ட காலத்தை நீடிப்பதற்கெனப் பின்வருமாறு வாசிக்கப்படும் வகையில் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது.

“(4) மேற்கூறப்பட்ட “மேல் மாகாணத்தில், கொழும்பு 01, கோட்டையில், உயர்தர வதிவிடங்களும் உயர்-முனைக் கடைத்தொகுதியும் உட்பட, கலந்த பாவனைக் கட்டிடத்தொகுதியாக ஆடம்பர ஹோட்டலொன்றை நிர்மாணிப்பதற்கான கருத்திட்டம்” 2020 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதியன்று வர்த்தகத் தொழிற்பாட்டைத் தொடங்குதல் வேண்டும்.”

மலிக் சமரவிக்ரம,
அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச
வர்த்தக அமைச்சர்.

கொழும்பு,
*2019, செத்தெம்பர் 23.*

*10 - 370*

1A - PG 4657 - 382 (2019/09) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.